# ஞானதீபம்

புததகம்—1 | 1983 ஞூ சித்திரை மீ 1 உ | இலக்கம்—9.

ஆலிம்சாகிபு குருமார்களைப்பார்த்து
குருமார்களே! தொழுகையின் உள்ள
மைகளையும் மேன்மையையுஞ் சொல்
லுகிறதானல் மிகவும் நீழமாகும். ஆனா
ல் நீங்கள் பள்ளிவாசலுக்குள்ளே மூஸ்
லிம்கள் பயபக்தியுடனும், அச்சத்துட
னும் தங்கள் தாழ்மையையும் அல்லா
ஹுததாலாவுடைய மகத்துவத்தையும்
உறுதிப்படுத்துஞ் செயலாகக்குனிந்து மு
ழந்தாளிற் கைகளைவைத்து, மகத்துவ
முடைய நாயன் பரிசுத்தமானவனென்
று புகழ்வதையும், பின்பு நிலைக்கு வ
ந்து தங்களின் மன்றுட்டங்களை நாய
ன் ஏற்றுக்கொள்வானென்ற நம்பிக்
கை யுடையவனுய்ப் புகழ்ந்தவனுடை
ய புகழை அல்லாஹுத்தாலா ஏற்றுக்
கொண்டான். நாயனே! வானங்களும்
பூமியும் அதின்பின் நீ நாடியவைகளெ
ல்லாம் நிறைந்த புகழுமுனக்கே என்று
கூறுவதையும், பின்பு சரீரத்திலுயர்த்தி
யான அங்கமாகிய தலையை யாவிலுந்
தாழ்மையான மண்ணிற் பொருப்பித்து,
மேலான நாயன் பரிசுத்தமானவனென்
று போற்றிப் புகழ்வதையும், இருப்பில்
வந்து என்னுடைய நாயனே! எனக்குப்
பிழை பொறுத்தருளெனக்குக்கிருபை
செய்தருளெனக்குதவி செய்தருள், எ
ன்னை யுயர்த்தியாக்கிவை, எனக் கிரண
ந்தந்தருள், எனக்கு நேர்வழி காட்டி
யருளென்று இரந்து கெஞ்சுவதையும்,
இவ்வித மொவ்வொரு நேரமும் பல
முறையும் மனமஞ்சி, இருதய முருகி
வணங்குவதையும் நோட்டமிட்டுக்
கொண்டு; கிறிஸ்தவர்கள் அலங்காரமா
ன உடைகளை யுடுத்துக் கோவிலுக்குப்
போய் ஆண்களும் பெண்களும் கலந்தி
ருந்து மதுரமான இராகங்களும், . இன்
பமான பாட்டுகளும் பாடி மகிழ்ச்சி
கொண்டாடுவதற்கு வணக்கமென்று
பெயர்வைத்துக் கொண்டிருப் பதை
யும், இந்துக்கள் தங்கள் கோவில்களிற்
சென்று சில பதார்த்தங்களை வைத்து
சுவாமிக்குப் பூசைசெய்வதையும், மே
ளதாளங்களடித்தும் தாசிகளாடிப்பாடி
யுங் கொண்டாட்டங் கொண்டாடுவ
தை வணக்கமென்று கூறுவதையும்,
புத்தர்கள் விக்கிரகங்களின் முன்னே
பூக்களைவைத்துக் கும்பிட்டு மேளங்க

ளை யடிப்பதைத் தெய்வ வணக்கம்போல் எண்ணி யிருப்பதையும் ஒப்பிட்டுப் பரிசுத்தமுடைய நாயனின் மகத்துவத்திற்கு அடியான் செய்யத்தகுதியான வணக்கமெது என்று பாரபட்சமின்றிச் சொல்லுங்கள். வணக்கங்களிற் கேட்கும் பிரார்த்தனைகளை நீங்க ளொப்பிட்டுப்பார்த்து எந்த வேதக்காரர்களின் பிரார்த்தனை மனமுருகத் தக்கதென்று தீர்ப்புச்சொல்லுதற்காகக் கிறிஸ்தவர்களொவ்வொருநாளும் செய்யும் செபத்தையும், இந்துக்களுடைய பூசையையும், புத்தர்கள் சொல்லும் விண்ணப்பத்தையும், முஸ்லிம்கள் ஒவ்வொரு தொழுகை முடிவிலும் ஓதும் அத்தஹிய்யாத்தையுஞ் சொல்லுகிறேன். இவைகளைக் கேட்டு எது மேன்மையுடைய தென்று சொல்லுங்கள்.

கிறிஸ்தவர்களின் ஜெபமாவது:— பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல், எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

இந்துக்களின் ஜெபமாவது:—இந்துக்கள் கோவிலுக்குப் போனவுடன் வெளிப்பிள்ளையாருக்கு ஓம் மஹா விக்னேசுரூயினமா, பெரிய விக்கினேசுரரே என்று நமஸ்காரம்பண்ணி கோவிலுள்ளே நுழைந்து நந்திகேசுரர் என்கிற சுவாமியின் ரூபத்திற்குக் கும்பிட்டுவிட்டுக்கோவிலுக் குள்ளேயிருக்கிற மூலப் பிள்ளையாரைத் தெரிசித்தவுடனே, தலை இருபுறமும் கொட்டிக் காதுகளைப் பிடித்து உக்கிபோடுவார்கள், கொட்டும்பொழுதும் உக்கிபோடும் பொழுதும், ஓம் மஹா விக்னேசுரூயினமா வென்று சொல்லி விபூதி பூசிக்கொள்வார்கள். குருக்கள் சொல்லும் மூல மந்திரத்தைச்சொல்லிப்பின்பு கோவிலை மூன்றுதரஞ்சுற்றி, பல தேவர்களையும் வணங்கி நமஸ்காரஞ்செய்து தீப தெரிசனை பெற்றபின், விபூதி தீர்த்தம் திருநூறு, புஷ்பம், சந்தணம் பெற்றுக்கொண்டு வருவார்கள். இதுதான் அவர்கள்வணக்கம்.

புத்தர்கள் பூவை வைத்துப் பூசைபண்ணும்பொழுது சொல்லும் வசனமாவது:—(வர்ண கந்த குணுப்ப பேததங் கேத்தம் குசும் சந்ததின பூஜயாமி முனிந்தஸ்ஸ சிரீபாத) இந்த உயர்த்தியான பூக்களையும் பரிமளங்களையும புத்தரின் பாதார விந்தத்திற்குப் பூசைசெய்கிறேன். (வந்தாமி சபபட்டானே சுபதிட்டிதங், சாரீரிக்பதாத்து மஹாபோதிங் புத்தரூப்பங் நமஸ்பத்தி) என்னால் சகல கோவில்களுக்கும் புத்தருடைய சரீர அடையாளங்க ளிருக்கின்ற சகல அடையாளங்களுக்கும் ரூபங்களுக்கும் நமஸ்காரஞ்செய்கிறேன்.

முஸ்லிம்களின் அத்தஹிய்யாத்தின் பொருளாவது:—வரிசையான காணிக்கையும் கலவான தொழுகையும் அல்லாவுக்காயிருக்கும், ஈடேத்தமும் அல்லாகுத்தாலாவுடைய கிருபையும் அவனுடைய அருளும் என்னுடைய நபியே உங்களுக்காயிருக்கும், ஈடேத்தம் எங்களுக்கும் அல்லாகுத்தாலாவுடைய சற்குணங்களாகிய அடியார்களுக்குமாயிருக்கும், வேறு நாயனில்லை அல்லாவைத்தவிரவென் றுறுதி சொல்லுகிறேன், முஹம்மதாகிறவர்கள் அல்லாவுடைய திருத்தூதரென்றும் உறுதி சொல்லுகிறேன், நாயனே முஹம்மது சல்லல்லாகு அலைகிவொசல்ல மவர்கள் மீது கிருபை புரிந்தருள், அவர்கள் உறவினர்கள் மீதும் கிருபை புரிந்தருள், எங்களுடைய நாயகம் இபுருஹீங் அலைகிஸ்ஸலாமவர்கள் மீதும் அவர்கள் உறவினர்கள் மீதும் கருணை புரிந்ததுபோல் எங்கள் நாயகம் முஹம்மது சல்லல்லாகு அலைகிவொசல்ல மவர்கள் பேரிலும் அவர்களுறவினர்கள் பேரிலும் கருணை புரிவாயாக, உண்மையாக நீயாகிறவன் புகழப்பட்டவனுமாய் மாட்சிமை தங்கியவனுமாயிருக்கும், நாயனே உன்னிடததே தஞ்சந்தேடுகிறேன், கபுறின் வேதனைகளை விட்டும், நரகத்தின் வேதனைகளை விட்டும், ஹயாத்தினுடைய மோசங்களை விட்டும் மவுததினுடைய உபத்திரவங்களை விட்டும், தஜ்ஜாலுடைய இடர்களை விட்டும் உன்னிடத்தே தஞ்சம் தேடுகிறேன், நாயனே நான் முன் செய்தபாவம் பின்னுற் செய்யும்பாவம் அந்தரங்கத்திற் செய்த பாவம் வெளியிரங்கத்திற் செய்தபாவம் நான் வீணுக்கினதாலுண்டான பாவம் என்னில் நீ அறிந்த பாவங்கள் சகலதையும் மன்னித்தருள், முற்படுத்துகிறவனும் நீயே பிற்படுத்துகிறவனும் நீயே, நீயல்லாது வேறு நாயனில்லை, நீயே பரிசுத்தமானவன், உண்மையாக நான் அநியாயகாரர்களிலுள்ளவனுகி விட்டேன். நாயனே என்னுடைய நபுசுக்குப் பெரிய அநியாயங்கள்மிகுதம் செய்துவிட்டேன், பாவங்களை மன்னிப்பவன் உன்னையல்லாது வேறொருவருமில்லை, ஆகையால் உன்னிடத்தே யுள்ள பிழை பொறுக்குதலைக் கொண்டென் பிழைகளைப் பொருத்தருள், உண்மையாக நீயே பிழை பொறுத்துக் கிருபை செய்கிறவன்.

இந்த நாலு வேதக்காரர்களுடைய துஆக்களில் ஆழமான கருத்தும், மனமுருகத்தக்க இரப்பும், நாயனின் மேன்மைக்குத்தக்க புகழும், நமது கீழ்மையையும் பாவத்தையும் விண்ணப்பஞ் செய்து மன்னிப்புக்கேட்கும் மன்றுட்டமும் எதிலிருக்கின்றன வென்பதை நீங்களே சொல்லுங்கள்,

ஆகையால் நமது தொழுகையைத் தொழவேண்டிய சட்டப்படிக்குப் பலபராக்குகளையும் விட்டுக் கல்பை நீக்கிப் பெருமையை யொடுக்கி, தான் தொழுகையிற் புகழும் புகழ்களையும், ஓதும் தஸ்பீருகளையும், இரக்கும் இரப்புகளையும் மன்றுடிக்கேட்கும் மன்னிப்புகளையுமறிந்து உள்ளச்சங்கொண்டு ஒரு நேரம் தொழுதானேயானுல் அவன் கல்புருகிவிடும். தன் நாயன் பெயரிலுள்ள

பயபக்தியும், அவன் கருணையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்கிற ஆசையும் கல்பைச் சுத்தமாக்கிவிடும், கல்பில் கெட்ட எண்ணங்களுண்டாகுதற்கு இடமிராது. இவ்விதமொவ்வொரு நாளும் ஐந்து நேரம் வணங்கிவந்தால் அல்லாகுத்தாலாவின் றகுமத்தென்கிற கடலில் மூழ்கிவிடுவான். இப்படித்தொழும் தொழுகையைக் குறித்தது தான் நபிலல்லல்லாகு அலைகிவசல்லம் ஒரு அடியான் தொழுகையில் நின்றால் அல்லாகுத்தாலா தனக்கு மவனுக்கு மிடையேயுள்ள திரையை நீக்கிவிடுவான். மலாயிக்கத்துகள் அவனோடுசேர்ந்து தொழுவார்கள், அவனுடைய துஆவுக்கு ஆமீன் கூறுவார்களென்று சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் தொழாமல் கல்பு துன்யாவின் எண்ணங்களென்கிற நஜீசுகள் நிறைந்து அறபுச்சொற்களைப்பாடம் பண்ணிக்கொண்டு அவைகளின் பொருள் தெரியாமலு மவைகளின் கருத்து மனத்திற் பதியாமலும் உள்ளச்சமில்லாமலும தொழுகிற தொழுகை பலன் கொடாதிருப்பது, அவரவர்கள் கல்பையும் குணத்தையும செய்கையையும் நோட்டமிட்டால் விளங்கும்.

குருமார்களே! ஸக்காத்தைக் குறித்துப் பேசப்போகிறேன்.

நமது மார்க்கத்தின் மூன்றும் அடித்தானமாவது ஸக்காத்து அதாவது:— தனது பொருளில் தருமங் கொடுப்பது பொன்னிருந்தால் நூற்றுக்கு இரண்டரை வீதமும், மற்றப்பொருள்களில் நியமித்திருக்கிற கணக்குப்படிக்கு தருமங் கொடுக்கிறதுமா யிருக்கும். இதைப்பற்றிய ஷறுத்துகளை நானிப் பொழுது சொல்லத் தேவையில்லை. ஸதக்கா வென்பது ஸக்காத்துக் கொடுப்பதற்கு மேலதிகமாகச் செய்யும் தருமங்கள், இவைகளிரண்டுடைய உள்ளமைகளையும் அவைகளைச் செய்யும் ஒழுங்குகளையும் பொதுவாய்ச் சொல்லுகிறேன்.

நமது வணக்கங்கள் சரீரத்தைக் கொண்டும் பொருளைக்கொண்டும் செய்யுமபடி ஏவப்பட்டிருக்கின்றது. பொருளாவது, மனிதன் மிகவும விரும்பப்பட்டதாகவும் அதைக்கொண்டு அவன் உலகத்துக் காரியங்களில் மிகுதமெல்லாம நிறைவேற்றக்கூடியதாகவு மிருப்பதாலதை அல்லாகுத்தாலாவின் பெயரிலுள்ள அன்புக்காகவும், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படுதலாகவும் தருமமாகக் கொடுப்பதை வணக்கமாக்கி வைத்திருக்கின்றது. ஆனால் ஸக்காத் தல்லது சதக்காக் கொடுத்தும அது பலன்பெறாமற் போகவுங்கூடும், பணத்தை வீணிற் செலவாக்குதலாகவுங் கூடும், அதிற் பாவம் விழையவுங்கூடும். ஆகையாலித்தத் தருமங்களைச் செய்யவேண்டிய விதமாகச் செய்யவேண்டும். அல்லாகுத்தாலா சதக்காவைப் பெருமையினாலும் வருத்தமுண்டாகும விதமாகவும பழுதாக்கிக் கொள்ளாதையுங்களென்று திருவுளம் பற்றியிருக்கிறான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் தருமஞ்செய்கிறவனென்ற கீர்த்திக்காக அல்லது தருமசிந்தை யுடையவனென்று பிறர் நினைப்பதற்காக, அல்லது எடுத்துப்பே

சுதற்காகக் கொடுக்கும சதக்காவை அல்லாகுத்தாலா ஒப்புக்கொள்ள மாட்டானென்று சொல்லியிருக் கிறார்கள். ஆகையால் நாம் தருமஞ் செய்யும் பொழுது இக்குணங்களால் அது பழுதாகிப் போகாமற் பேணிக்கொள்ளவேண்டும். இரகசியமாய்த் தருமங்கொடுப்பது மிகவும் உத்தமமாயிருக்கும், அதற்காகச் சிலர் குருடர்களின் கைகளிற் பணத்தைப போட்டுவிடுவார்கள், ஏழைகளிருக்கிற விடங்களில் அவர்கள் காணமற் பணத்தை எறிந்துவிடுவார்கள், கொடுப்பவரை யறியா திருப்பதற்காகப்பிறரிடங்கொடுத்துக் கொடுக்கச் செய்வார்கள். இவ்வித மிரகசியமாகச் செய்வதனால் தன் மனத்திற் பெருமை யுண்டாவதற் கிடமில்லாமலும், பிறர் புகழ்வதற்கிடமில்லாமலு மிருக்கும். சதக்காக் கொடுப்பது உலோபத்தன மென்கிற கேடு நீங்கி கல்பு துப்பரவாகுதற்காயிருக்கும. தருமத்தைக்கொண்டு கீர்த்தியை விரும்புதல் உலோபத்தனத்திலும் அதிகக் கெடுதியை யுடையது. உலோபத்தனத்தைப்போல் கீர்த்தியை விரும்புதலும் ஆகிறத்தில் ஹலாக்கை வருத்திவிக்கும்.

நாம் முன் குறித்துக்காட்டிய அல்லாகுத்தாலாவுடைய திருவசனத்தால் வருத்தப்படுத்தியும் உங்கள் சதக்காவைப் பழுதாக்கிக் கொள்ளாதையுங்களென்ற சொல்லின் கருத்தாவது, ஏழைகளுக்குத் தருமங் கொடுக்கும்பொழுது முகங் கடுகடுத்தும் தூஷித்தும் மனத்திற்கு வருத்தமுண்டாக்கியுங் கொடுப்பதனால் பலனில்லையென்பதே, இப்படிச்செய்வது தருமங் கொடுப்பவன் தான் கொடுப்பவனென்கிற பெருமையைக்கொண்டும், எடுப்பவன் ஏழையானபடியால் கீழ்மையானவனென்றும் நினைத்தே. ஆனால் உள்ளமையைப்பார்த்தால் தன்னைப்பெருமையாக நினைக்கவும், இரப்பானைக் கீழ்மையாக நினைக்கவுங்காரணமில்லை. பொருளாவது உள்ளமையில் அல்லாகுத்தாலாவுக் குடையதாயிருக்கும், அவனே அதைப் படைத்தவன், சிலகால மொருவர் கையிலிருக்கவும் பின்பு மறுபெயர்களிடம் போகவுஞ் செய்கிறான். அவனிடத்தே யிருக்கும பொழுது சதக்காக் கொடுப்பதற்கு மனந்திரும்பிக் கொடுத்தல் பாக்கியம் பெற்றுப்போகிறான், அந்தப்பாக்கியம பெறுதற்குக் காரணராயிருப்பது அந்த இரப்பானே, அவன் வழியாக இவன் பேறைப்பெற்றுக் கொள்ளுகிறான், இன்னம் ஏழியவர்களை உலகத்தில் சிறுமையாகக்கண்டாலும அல்லாகுத்தாலா விடத்தில் அவர்கள் உயர்ந்த பதவியை யுடையவர்களா யிருக்கிறார்கள். இது காரணத்தினால் சாலிஹான மனிதர்கள் மிஸ்கின்களுக்கு ஏதாகுதல் கொடுக்கும்பொழுது தங்கள் கையைப்பணித்து விரித்து அதிலுள்ளதை எடுத்துக்கொள்ளும்படி தாங்கள் மிஸ்கீனிடம் தயவுவைத்து எடுத்துக் கொள்ளுங்கள், அல்லாகுத்தாலா உங்களுக்கு பறக்கத்தைத் தருவானென்று தங்களுக்குத் துவாக்கேட்குமுன் தாங்கள் அந்த மிஸ்கீனுக்கு துவாக்கேட்பார்கள். இதாவது பணத்தின் பெறுமதி

யையும் சதக்காவின் உள்ளமையையும், அறிந்த அறிவாழிகளின் நடக்கையா யிருக்கும். நபிசல்லல்லாகு அலைஹிவ சல்லம் அஸ்ஹாபிமாகளிடம் நீங்கள் உங்களுக்கு உதவுகிற பொருளின் பெ யரிற் பிரிசம் வைப்பீர்களோ, உங்களு க்குதவாமல் உங்கள் அநந்திரர்களொடு த்துக்கொண்டு போகப்படும், பொரு ளின் பெயரிற் பிரிசம் வைப்பீர்க ளோவென்று கேட்டபொழுது அஸ் ஹாபிமார்கள் எங்களுக்குதவும் பொரு ளின் பெயரில்தான் பிரிசம் வைப்போ மென்று சொல்லி, நாயகமே எங்கள் முதலெது, எங்கள் அநந்திரங்கள் முத லெதுவென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் நீங்கள் ஹயாத்தாயிருக்கும் பொழுது அல்லாகுத்தாலா வுடையபா தையிற் செலவு பண்ணுகிறதுதான் உ ங்களுடைய முதல், செலவு செய்யாமல் அநந்தர்களுக்குச் சேரும்படி வைப்பது அவர்களுடையதுஎன்றுசொன்னார்கள். ஆகையால் நம்மிடமிருக்கிறபொருளை ந மக்குச் சொந்தமாக்கவும், நமக்குதவவு ம், நமக்குப் பேறுண்டாகவுஞ் செய்கிற வர்க ளந்த மிஸ்கின்களே, அதனுல் தா ம் கொடுப்பதைக் கொண்டு பெருமை பாராட்டவும், எடுப்பது கொண்டு அவ ர்களைச் சிறுமையாய் நினைக்கவும் நியாய மில்லை. எவ்வளவோ சனங்கள் பொ ருளைப் பதறிப்பதறித் தேடுகிறவர்களா யு மதை யதிகப்படுத்த வேண்டுமென்கி ற ஆவலாவும், அதை யுபயோகப்படு த்தாம லிறந்துபோகிறார்கள்,

முகம்மது நபுனுஸ் ஸமாக்கு றகுமகு ல்லாகு ஒருநாள் கபுறுஸ்தான் அருகே போகும்பொழுது ஒரு கபுறுஸ்தானில் ஒரு கடிதத்தைக் கண்டார்கள், அதி லெழுதியிருந்தது என்னுடைய உறவி ன் முறையார்களும் சினேகிதர்களுமெ ன்னுடைய கபுறுக் கருகே போகும் பொழுது என்னை யறியாதவர்களைப் போல் நடக்கிறார்கள், அநந்திரர்கள் என் ஆஸ்திகளை யெல்லாம் கடன்காரர் களுக்குக் கொடுக்காமல் பங்கு வைத் துக்கொண்டார்கள், நாயனே இதெ ன்ன புதுமை! இவ்வளவு சுறுக்கிலென் னைமுழுதும் மறந்துவிட்டார்களே, என் மனைவி மக்களையெல்லாம் விட்டுவிட்டு க்கபுறி லடக்கப்பட்டேன், எனக்கு துஆச்செய்கிறது கொண்டும் சதக்காக் கொடுக்கிறது கொண்டு முபகாரஞ்செ ய்யுங்கள், என்பெயரிற் கிருபைவைத் து என்னை நினைத்துக்கொள்ளுங்க ளெ ன் றெழுதியிருந்தது.

சீமான்களாகவும் வியாபாரிகளாகவு ம் பணமதிகமாகச் சேகரிக் கிறவர்க ளே! உங்களுடைய ஹாலும் இந்த கபு றுளியின் ஹாலைப்போல் வராதென்று நினைத்திருக்கி றீர்களோ, உலகத்தில் இ றந்த தாய் தகப்பனை யல்லது உறவின ர்களை நினைப்பவர்களும், சதக்காக் கொ டுப்பவர்களும் ஆயிரத்தி லொன்றுண்டு மென்று தானுஞ் சொல்லக்கூடுமா? இ வர்களுக்காகவா நீங்கள்உங்கள் நபுசுக ளை ஹலாக்காக்கிக் கொள்ளுகிறீர்கள், நீங்கள் பிரயாசப்பட்டுச் சம்பாதித்த

பொருள்கள் உங்களுக்கு உதவாமல் கபுறில் நீடியகாலம் பரிதாபிக்கச் செய்து கொள்ளுகிறீர்கள். எவ்வளவு பெயர்கள் மிஸ்கீன்கள் வீட்டுவாசலில் நின்று சத்தமிட்டு அலட்டுதற்காக ஏதாகிலும் கொடுத்தனுப்புவதையும், செய்குமார்கள் செய்யிதுமார்கள் வரும்பொழுது முகஞ்சடைந்து மனவருத்தத்துடனே கொடுப்பதையும் நன்மையான விஷயங்களுக்குச் செல்வாக்கையுடையவர்கள் வரி எழுதவந்தால், முகத்தாட்சினைக்காக வரி எழுதிவிட்டுப் பல தவணைகள் சொல்லி இழுத்துச் சுணக்கிக்கொடுப்பதையும் சதக்காவென்று நினைத்திருக்கிறார்கள். அல்லாகுத்தாலாவுடைய திருவசனப்படிக்கும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய சொற்படிகளும் இவைகள் சதக்காவாக மாட்டாது. சதக்காவாவது அல்லாகுத்தாலாவுக் காக மனமுவந்து கொடுப்பதாயிருக்கும். இதிலவர்கள் பிரயோசனம் பெறவேண்டுமானால் தங்கள் மனத்தைத் துப்பரவாக்கவேண்டும், நாட்டத்தைச் சுத்தமாக்கவேண்டும். இரப்பவர்கள் மனவருத்தமாகாது பேசவேண்டும், கொடுப்பதைப் பிற்படுத்தாது கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் நாம் சதக்காக் கொடுக்கவேண்டியபடி கொடுக்கின்றோமாவென்று யோசித்து தாங்கள் முகததாட்சினைக்குக் கொடுக்கிறதானால் அது சதக்காவாக மாட்டாதென்பதை நிட்சயித்துக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறந்த மாத்தையில் மவுலுகளோதிச் சிறப்பிப்பதைப் பார்த்துப் பிறவூரவர்களெல்லாம் புகழ்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்யுஞ்சிறப்புகளோடு ஓதும் மவுலிதை விளங்கும் பாஷையில் மொழிபெயர்த் தோதுவார்களேயானால் மிகவும உத்தமமாயிருக்கும். இவ்விஷயத்தை உலமாக்கள் கருதுவார்களென்று நம்பியிருக்கிறேன். ஒரு வழக்கம இலங்கை முழுவதிலும் பரந்திருந்து, இப்பொழுது அது குறைந்து கொண்டுவருகிறது, அதாவது மவுலிதிலுள்ள அறபு பைத்துகளைத் தமிழ்ப்பாட்டிராகமா யோதுகிறது. அப்படி யோதுவதால் அறபுச்சொற்கள் வேறு சொற்களாகி, புகழ் பழிப்பாகிப்போகின்றது. உதாரணம், அல்லாவென்பதை அ அல்லாவென்றால் அல்லாவோ வென்கிற சந்தேகமாய்க்கேட்கிறதுபோல் பொருளுண்டாகி விடுகின்றது. ஒரு சங்கையான மனிதன் முன்னே போய் அவருடைய முகம்மதென்கிற பெயரை மு. முகம்மம் அ அது என்று நீட்டிச்சொன்னால் அவரைப்பகிடி பண்ணுவதா யிருக்கமாட்டாதா, அதுபோலவே, நபிநாயகத்துடைய பெயரைச் சொல்லும் பொழுதும், அல்லாகுத்தாலாவுடைய நாமத்தை மொழியும் பொழுதும் சங்கையாகவும் அச்சத்துடனும் மொழிவதற்கு வதலாக எழுத்துகளை நீட்டியும் பல எழுத்துகளை நுழைத்தும் பாடுவது அவமரியாதை யல்லவா? ஆச்சரியமாவது,

ஆலிம்கள் இதைத்தடுப்பதற்கு வதலாக, அவர்களிற் சிலர் தாங்களு மிவ்விதஞ்சேர்ந் தோதுவதே. கப்பல் பாட்டு ஊஞ்சற்பாட்டு முதலிய பாட்டுகளுக்கிணக்கி, பைத்துகளுக்குப் பொருளில்லாமலாக்கிப் பொருள் தெரிந்தவர்கள் மனவருத்தங் கொள்ளத் தக்கதாக்கி விடுகிறார்கள், இன்னமொரு உதாரணஞ் சொல்லுகிறேன், அல்கவுனு பைத்தில்.

வகர்றத்தில் அஸ்ஹுமின் அஜ்லிஹீ
அல்லா, கிபாறுஹார்தல்லூபிகஷ்
நிஸ்ஸகார்-வில்லா

என்று பைத்தோடு அல்லாவென்கிற பெயரைச்சேர்த் தோதப்படுகிறது, அப்படி யோதினால் அந்த பைத்தின் பொருள் கபிதாயகம் பிறந்த காரணத்தால் விக்கிரசங்கள் அடித்து விழுந்தது அல்லா, அவைகளிற் பெரிய விக்கிரகம் மிகவு மிழிவாகிச் சிறுமைப்பட்டது அல்லாவுக்கு, இவவிதம் பிழையான பொருள்களுண்டாகிப் பாவங்களுண்டாவதற் கிடமாகின்றது, இப்படி இழிவான காரியங்கள் நடக்க விடாமல் தடுப்பது உலமாக்களின் கடமையாயிருக்கும்.